# வன விலங்குகளிடமிருந்து பொதுமக்களை பாதுகாக்க சோலார் மின் வேலி அமைத்துத் தர வேண்டும்!

## பேரவையில் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு... 11ஆம்பக்கத்தொடர்ச்சி

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி, கள்ளிமந்தையத்தை தலைமையிட மாக கொண்டு புதிய தனிவட்டம் மற்றும் ஒட்டன் சத்திரம் உள்வட்டத்தினை இரண்டாக பிரித்து சத்திரப்பட்டியினை தலைமையிடமாக கொண்டு புதிய உள்வட்டமாக உருவாக்க வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, அருள்மிகு பழனி யாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியின் சுற்றுச் சுவர் கட்டவேண்டிய இடத்தை தனிநபர்கள் ஆக் கிரமிப்பு செய்துள்ளதால், அதை அகற்ற வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, மஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில், 30 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கிட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தையம் கிராமத்தில், 390 பயனாளிகளுக்கு இலவச வீட் டுமனை பட்டா வழங்கிட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் கிராமத்தில், 280 பயனாளிக ளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் கிராமத்தில், மண்டவாடி கிரா மத்தில், 90 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கிட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் வட் டம், அத்திக்கோம்பை கிராமம், ரெட்டிபட்டி கிரா மம், தேவத்தூர் கிராமம், சின்னக்காம்பட்டி கிரா மம், ஆகிய கிராமத்தில் விடுபட்ட மீதமுள்ள பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி வட்டம், தாளையூத்து கிராமம், புஷ்பத்தூர் கிராமம், மாரிச் சிலம்பு கிராமம், வாகரை கிராமம், ஆகிய கிரா மத்தில் விடுபட்ட மீதமுள்ள பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கிட வேண் டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி வட்டம், முத் துநாயக்கன்பட்டி கிராமம், கோரிக்கடவு கிராமம், கொழுமங்கொண்டான் கிராமம், எட்டமநாயக் கன்புதூர் கிராமம், மிடாப்பாடி கிராமம், வேலம் பட்டி கிராமம், கோட்டத்துறை கிராமம், ஆகிய கிராமத்தில் விடுபட்ட மீதமுள்ள பயனாளிக ளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நக ராட்சி, அரசு மருத்துவமனையில் மருத்துவ பணியாளர்கள், நவீன சமையற்கூடம், கிரிமி நீக்கி டைமயம், சலவை இயந்திரம், சிமெண்ட் தளம், சி.டி.ஸ்கேன், காத்திருப்புக்கூடம் போன்ற பணிகளை நிறைவேற்றித் தர வேண்டும்.

### அரசு மருத்துவமனையை தரம் உயர்த்துக!

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நக ராட்சி, அரசு மருத்துவமனையில் 3 அவசர ஊர் திகளை இயக்கித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி வட்டம், அரசு மருத்துமனைக்கு, மருத்துவ பணியாளர்கள், மருத்துவ உபகரணங்கள், தளவாட பொருட்கள் போன்றவற்றை நிறைவேற்றித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தையம், இடையகோட்டை, நரிக்கல்பட்டி, மிடாப்பாடி கீர னூர் (பழனி) இடங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை, அரசு மருத்துவமனையாக உயர்த்தித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் வட் டம், இடையகோட்டையில் அரசு ஆரம்ப சுகா தார நிலையைம் கட்டுவதற்கு பணியை தொடங் கித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம்அவ சினாசி சாலை, தாளையூத்துகள்ளிமந்தையம் நெடுஞ்சாலை, மஞ்சநாயக்கன்பட்டிகள்ளிமந் தையம் சாலை, வேலம்பட்டிகூத்தம்பூண்டி நெடுஞ்சாலை ஆகிய சாலைகளின் இடையே மேம்பாலம் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம்உடு மலைப்பேட்டை இடையே அரசபிள்ளைபட்டி, சத்திரப்பட்டி, ஆயக்குடி, தாளைபூத்து இடங்க ளில் இரயில்வே மேம்பாலம் கட்டித் தர வேண் டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள மாவட்ட சாலைகள் அனைத்தையும் அகலப்படுத்தித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரத்தில், பழனியில் பயணியர் விடுதி கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி கிரா மம், கேதையுறம்பு கிராமத்தில், ஒருங்கி ணைந்த விளையாட்டு மைதானத்திற்கு தங்கும் விடுதி, உள்விளையாட்டரங்கம், சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில், குறுவட்டங்கள் தோறும் விளையாட்டு மைதானம் அமைத்து விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட வேண் டும்.

ஒட்டன்சத்திரம்தொகுதி, விளையாட்டுத்துறை யில் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்க னைக ளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண் டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, காளாஞ்சிபட்டி கிரா மத்தில் கலைஞர் நூற்றாண்டு போட்டித் தேர்வு மையத்தில் விடுதி கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, காவிரிஅமராவதி ஆறுகள், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர்ஒட் டன்சத்திரம்வேடசந்தூர்நத்தம், கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி, கரூர்கிருஷ்ணராயபுரம் ஆகிய தொகுதியில் உள்ள குளங்களுக்கும் நீரேற்றம் மூலம் தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும்.

### பாசனவசதி செய்து தர வேண்டும்!

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனியில் பாலாறு பொருந்தலாறு கால்வாய் சீரமைத்து, சிலாப்லய னிங், மடைகள் அனைத்தும் செப்பனிட்டு பாசன வசதி செய்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சி யில் பரப்பலாறு அணையை தூர்வாரித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணை யிலிருந்து தண்ணீர் முத்துபூபால சமுத்திரம், பெருமாள்குளம், முத்து சமுத்திரம், காவேரியம் பட்டி குளம், ஒட்டடை குளம், பாப்பாகுளம், சடை யன்குளம், செங்குளம், கருங்குளம், ஜவ்வாது பட்டி குளம் ஆகிய குளங்களுக்கு லைனிங்ல் சிமெண்ட் கற்கள் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, நல்லதங்காள், சண் முகநதி, நங்காஞ்சியாறு, மானூர் கிராமம், சண் முகநதி ஆறு, வலையபட்டி கிராமம், நங்காஞ்சி யாறுசண்முகனதி குறுக்கே, கொங்கபட்டி கிராமம், நல்லதங்காள் ஓடையின் குறுக்கே, வெரியப்பூர் கிராமம், நங்காஞ்யாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, பாலாறுபொருந்த லாறு, மாரப்பக்கவுண்டன் வலசிலிருந்து போது பட்டி, கொழுமங்கொண்டான், இராஜாம்பட்டி, மேல்கரைப்பட்டி, கோட்டத்துறை வரை கலிக்க நாயக்கன்பட்டிதொப்பம்பட்டி அரண்மனை குளத்திற்கு வரை வாய்க்கால் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, சடையன்குளம் செங்குளத்திற்கு வாய்க்கால் அமைத்து, லைனிங் மூலமாக சிமெண்ட் கற்கள் பொறுத்தி தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டை, வலையபட்டி, சின்னக்காம்பட்டி கிராமங்களில் நங்காஞ்கியாறு அணையின் கால்வாயை, பரப் பலாறு அணையின் மதகின் கதவுகளை சீர மைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, திண்டுக்கல் மாவட் டம், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட 2000 வீடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் வட் டம், வடகாடு ஊராட்சி, மாட்டுப்பட்டிக்காடு கிரா மத்தில் வீடுகள் கட்டித்தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம்தொப் பம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாக பிரித்து கள்ளிமந்தையத்தை தலைமையிடமாக கொண்டு ஊராட்சி ஒன்றியம் அமைத்துத் தர வேண்டும்.

### தொகுப்பு வீடுகளை பராமரிக்க வேண்டும்!

தமிழகத்தில் பல்வேறு ஊராட்சிகளில், தாழ்த் தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்களின் தொகுப்பு வீடுகளை பராமரிக்க சிறப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தி தர வேண் டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, அனைத்து ஊராட்சி பகுதிகளில் உட்கடை கிராமங்களில் சுகாதார வளாகம் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சிக்கு குடிநீர் வழங்கித் தர வேண்டும்.

தமிழகம் முழுவதும் ஊராட்சி அமைப்புக ளுக்கு மாநில நிதி ஒதுக்கித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, விருப்பாட்சி ஊராட்சி, தலையூற்றுவடகாடு ஊராட்சியில் பரப் பலாறு அணையை சுற்றுலா தலத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, மிடாப்பாடி ஊராட்சி வன்னியர்வலசு கிராமத்தில், தேசபிதா மகாத்மா காந்திக்கு நினைவு மண்டபம் கட்டித்தர வேண் டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, நெல் குவிண்டால் ஒன்றுக்கு ஆதார விலையாக ரூ.4,000/ ஆக உயர்த்தித் தர வேண்டும்.

தமிழகம் முழுவதும் விவசாயிகள் கடனை முழுமையாக தள்ளுபடி செய்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, வாடகை கட்டடத்தில் இயங்கும் அனைத்து நியாய விலைக்கடை களுக்கும் சொந்த கட்டடம் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், ஒருங்கி ணைந்த வளாகத்திற்கு சொந்த கட்டடம் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, குழந்தை வேலப்பர் திருக்கோயிலில் அருள்மிகு முருகன், இடும்பன் இக்கோயில் திருப்பணிக்கு ரூ.15 கோடி நிதி ஒதுக்கித் தர வேண்டும்.

### 58 ஏக்கர் நிலத்தில் வளாகம்!

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு, சொந்த மான 58 ஏக்கர் நிலத்தில் வளாகம், அனைத்து துறைகளும் கொண்ட பல்கலைக்கழகம், வேளண் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் கிரிவலப்பாதையில் எழில்மிகு பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு வரும் பக் தர்களுக் இளைப்பாறும் மண்டபங்கள் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, அம்பிளிக்கை கிரா மம், கொத்தயம் கிராமத்தில் துணை மின்நிலை யம் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நக ராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் கொண்டு வர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நக ராட்சி, காந்தி மார்க்கெட் காய்கனி வளாகத்தில் மக்கும் குப்பைகளை செயலாக்கம் செய்ய உயிரி மீத்தேன் உருவாக்க ஆலை அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நக ராட்சியில் கழிவுநீர் வாய்க்கால்களின் மீதமுள்ள பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துத் தர வேண் டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நக ராட்சியில், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட் டத்தில் அறிவு சார் மையக்கட்டட பணியை விரைபடுத்தித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நக ராட்சியை தேர்வு நிலை நகராட்சியாக உயர்த் தித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட் சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் தார்சாலை, சிறுபா லம், சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, சுதந்திர போராட்ட வீரர் தியாகி கோபால்சாமி நாயக்கர் உருவம் பொறித்த தபால் தலை வெளியிடவும், வீர வாழ்க்கை வரலாற்றை பள்ளி பாடப்புத்தகத்தில் இடம்பெற செய்ய வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, அனைத்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள், அரசு உயர்நிலை பள்ளிகள், அரசு மேல்நிலைப்பள்ளிகளிலும் சீர் மிக வகுப்பறைகள் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, அரசு பள்ளி, அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை ஆங்கில பேச்சுப் பயிற்சியை மாணவர்க ளுக்கு கற்பிக்க வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி, சத்தி ரப்பட்டி, இடையகோட்டை, மார்க்கம்பட்டி, ஓடைப்பட்டி, பெரியகோட்டை அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப் பறை கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம், பள்ளி சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சின்னகரட்டுப்பட்டி, புளியம ரத்துக்கோட்டை, காவேரியம்மாபட்டி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப்பறை கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம், பள்ளி சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பொருளூர், பூலாம்பட்டி, மானூர், சாமிநாதமபுரம், பெரிச்சிபாளையம், மேல்கரைப்பட்டி, கரியாம்பட்டி, கூத்தம்பூண்டி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப் பறை கட்டடம், கழிப்பறை கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம், பள்ளி சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டி, தாளை யூத்து, கொக்கரக்கல் வலசு, மஞ்சநாயக்கன் பட்டி, கீரனூர் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப்பறை கட்ட டம், அறிவியல் ஆய்வுக்கூடம், பள்ளி சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, க.ரெ.அரசு மேல்நி லைப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நி லைப் பள்ளிகளில் கலையரங்கம், கூடுதல் வகுப் பறை கட்டடம் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி ஊராட்சி ஒன் றியம், கணக்கன்பட்டி அரசு உயர்நிலைப்பள் ளியை, மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தி கூடு தல் வகுப்பறை கட்டடம், கழிப்பறை கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடம், சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, புளியமரத்துக் கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நி லைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில், பொறியியல் கல்வி பயில அரசு பொறியியல் மற்றும் தொழில் நுட்பக்கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தையத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கூடுதல் பாடத்திட்டம் கொண்டு வர வேண்டும்.

### தொழிற்சாலை அமைத்திடுக!

ஒட்டன்சத்திரம் தொகுதி, முருங்கை அதிக ளவு பயிரிடப்படும் பகுதியாக இருப்பதால் முருங் கையிலிருந்து, முருங்கை பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, தக்காளி அதிகளவு பயிரிடப்படும் பகுதியாக இருப்பதால் தக்காளியி லிருந்து மதிப்புகூட்டுப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் வட் டம், பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவியர் விடுதிக்கு கட்டடம், மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர் விடுதிக்கு ஆழ்துளை கிணறு அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் வட் டம், சத்திரப்பட்டி, தேவத்தூர், பெரியகோட்டை, கள்ளிமந்தையம் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவ, மாணவியர் விடுதிக்கு ஆழ்துளை கிணறு அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி வட்டம், தொப் பம்பட்டி மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவி யர் விடுதிக்கு ஆழ்துளை கிணறு அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் அனைத்து பிற்ப டுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளை பராமரிப்புப்ப ணிகள் செய்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தையத்தில் அரசு கலை கல்லூரியில் மாணவ மாணவியர்க ளுக்கு விடுதிகள் கட்டித்தர வேண்டும்.

அனைத்து அரசு பேருந்துகளில் பெண்கள் தமிழகம் முழுவதும் கட்டணமில்லாமல் பய ணம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, திண்டுக்கல் முதல் கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி, தாளையூத்து வழியாக பொள்ளாச்சி வரை இயங்கி வந்த 3 அரசு பேருந்தை மீண்டும் இயக்கித் தர வேண் டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில், போக்குவரத்து தொழிலாளர்கள் தங்குவதற்கு உணவுக்கூடம், புதிய பணிமனை அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நக ரம், கீரனூர் பேரூராட்சியில் வசிக்கும் பிற்படுத் தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறு பான்மை மக்களுக்கு நவீன அடுக்குமாடி குடியி ருப்புகள் கட்டித்தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, 60% குறைபாடு உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் மாதாந்திர உதவித்தொகை மற்றும் நான்கு சக் கர ஸ்கூட்டர் வழங்கிட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் அங்கன்வாடி மையம், குறு அங்கன்வாடி மையம் காலிப்பணி யிடமாக உள்ள பணியாளர், உதவியாளர், சமை யலர் பணியிடங்களை நிரப்பித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகளவு பயிரி டப்படும் கன்வல்லி கிழங்கு மலர் விதைகளுக்கு, கொள்முதல் நிலையம் அமைத்து வெளிநாடுக ளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, திண்டுக்கல் மாவட் டம், தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்மை துறை அலுவலகம், கூட்டுறவு வங்கிகளில் பயிர் காப்பீட்டுத் தொகை செலுத்தி யும், பயிர் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வில்லை, இழப்பீட்டுத் தொகை வழங்க வேண் டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, மாணவ, மாணவி யர்களுக்கு அரசு வேளாண் கல்லூரி அமைத் துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில்,ட இளைஞர்க ளுக்கு வேலை வாய்ப்பினை தந்து வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, கொழுமங்கொண் டான், சந்தன்செட்டி வலசு, பூலாம்பட்டி, கணக் கன்பட்டி, நரிக்கல்பட்டி, அமரப்பூண்டி பகுதிக ளில் உற்பத்தி செய்யும் பட்டு சேலையினை அரசே கொள்முதல் செய்து, விற்பனை நிலை யம் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் உற்பத்தி செய் யும் மல்பரியை இதை திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் வேளாண் விலைபொருள் மையத்தில் கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, கொழுமங்கொண் டான், நரிக்கல்பட்டி, சந்தன்செட்டி வலசு, அமரப் பூண்டி ஆகிய ஊராட்சி பகுதிகளில் “நெசவாளர் கூட்டுறவு சங்கம்” அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில், தொழிலாளர்க ளுக்கு ESI மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, விருபாட்சியில் அரசு தொழில்துறை பயிற்சி நிலையத்திற்கு, விடுதி அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, விவசாயிகள் உற் பத்தி செய்யும் பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, கேதையுறம்பு ஊராட்சியில் உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றி யம் அமைத்துத் தர வேண்டும்.

### கால்நடை மருந்தகம்!

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றி யம், கரியாம்பட்டி, கொத்தயம் இடங்களில் கால் நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்த கமாக உயர்த்தித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஒன் றியம், நவாலூத்தில் கால்நடை கிளை நிலை யத்தை, கால்நடை மருந்தகமாக உயர்த்தித் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றி யம், கப்பலப்பட்டி, வடபருத்தியூரில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றி யம், கப்பலப்பட்டியில் கால்நடை கிளை நிலை யம் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில், தேவையான இடங்களில் கால்நடை கிளை நிலையம் அமைத் துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, மேற்கு தொடர்ச்சி மலை, வடகாடு பகுதியில், வனவிலங்குகளிடமி ருந்து பொதுமக்களை பாதுகாக்க தொங்கு சோலார் மின்வேலி அமைத்துத் தர வேண்டும்.

### பழங்குடி மக்களுக்கு குடியிருப்பு பட்டா!

ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சி யில் பெத்தேல்புரம், புலிக்குத்திக்காடு, மாட்டுப் பட்டிக்காடு, சிறுவாட்டுக்காடு பகுதிகளில் ஆதிதிரா விடர், பழங்குடியின மக்களுக்கு குடியிருப்பதற்கு பட்டா வழங்க வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சி யில் கோட்டைவழி, கண்ணனூர், பெத்தேல்பு ரம், மாட்டுப்பட்டிக்காடு, புலிக்குத்திக்காடு, சிறு வாட்டுக்காடு பகுதிகளின் பழங்குடியின மக்களுக்கு அடையாள அட்டை, வன மகசூல் சேகரிக்கும் உரிமம் வழங்கிட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சி மலைப்பகுதிகளுக்கு ஆழ்துளை கிணறு அமைக்கும் வாகனம், JCB போன்ற வாகனங் களை அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் அர.சக்கர பாணி பேசினார்.

---

### படப்பை ஆ.மனோகரன் தலைமை! இ.மணி வரவேற்புரை! பழந்தண்டலம்

# ஐ.குமார் - கே.செண்பகம் இல்ல மணவிழா வரவேற்பு!

### தா.மோ.அன்பரசன் — டி.ஆர்.பாலு எம்.பி. வாழ்த்து!

காஞ்சிபுரம், ஆக. 23-

பழந்தண்டலம் கிளைக் கழகச் செயலாளர் ஐ.குமார் - கே.சண்முகம் ஆகியோரின் புதல்வர் கே.கோகுலுக்கும், சென்னை, மேற்கு மாம்ப லம், நினைவில் வாழும் சி.சிவசங்கர் - சி.தரணி அம்மாள் ஆகியோரின் புதல்வி எஸ்.ரக்சனாவிற் கும் மணவிழா 23.8.2026 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் திருத்தணி முருகன் கோவி லில் நடை பெறுகிறது.

இம்மணவிழா வர வேற்பு நாளை (24.8.2026 - திங்கள்) மாலை 6 மணிய ளவில் குன்றத்தூர் முரு கன் கோவில் ரோடு எண்.17ல் அமைந்துள்ள வைதிலிங்கம் பேலஸில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற் பிற்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடி வாக்கம் இ.மணி, சரஸ் வதி மனோகரன், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், உமாம கேஸ்வரி வந்தே மாதரம், லட்சாவதி கருணாகரன், கே. தியாகராஜன், வி. அசோக்குமார், ஜி.டி. ஸ்ரீதர் ஆகியோர் வரவேற் கின்றனர்.

இம்மணவிழா வரவேற் பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழ கப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவில் மு.சுப்பிரமணி, மு.செல்வ மணி, க.ஏழுமலை, வாசுகி, மகேஷ், வே.அரி. மா.பரிமேலழகன், இ.விஸ் வநாதன், கே.என்.சி.சத்தி யமூர்த்தி, பொன்.ரமேஷ் கவி, கு.ஏழுமலை, இலட் சுமி, ஞானசேகர், எஸ். வைரம், ச.பாலகிருஷ் ணன், ஜி.ஏ.இராயப்பா, தினேஷ் கந்தசாமி, மு.குமார், ப.அறிவொளி, பொன்.இளையபாரதி, மா.சே.பிரகாஷ் உள் ளிட்ட கழகத்தினர் பங் கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

சி.சரவணன், கே.பாக் கியராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

### நே.சிற்றரசு தலைமை! தயாநிதிமாறன் எம்.பி. — மு.க. தமிழரசு — அன்பகம் கலை முன்னிலை!

# ஆயிரம்விளக்கு வி.சுரேஷ் - ஹரிதா திருமண வரவேற்பு விழா!

### உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்! கழக முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஆக. 23-

சென்னை மேற்கு மாவட் டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி - (நினைவில் வாழும்) எம். வெங்கடேசன் - வி. இந்திரா ஆகி யோரின் புதல்வரும், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளருமான வி. சுரேஷ்க்கும், சென்னை - சூளைமேடு என். ஜெயப்பிரகாஷ் - ஜெ. சண்முகப் பிரியா ஆகியோ ரின் புதல்வி ஜெ. ஹரிதாவுக்கும் மணவிழா இன்று (23.08.2026-ஞாயிறு) காலை 9 மணியளவில் வடபழனி கோயிலில் நடைபெறுகிறது.

#### இன்று மணவிழா வரவேற்பு

ஆக. 23 மாலை 6 மணிய ளவில் சேத்பட், டாக்டர் குருசாமி சாலையில் அமைந்துள்ள அறி



ஞர் அண்ணா அரங்கத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற் பிற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

தயாநிதி மாறன் எம்.பி., மு.க. தமிழரசு, அன்பகம் கலை, மருத்தவர் எழிலன் நாகநாதன், தூத்துக்குடி எஸ். ஜோயல், வழக் கறிஞர் ப. பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வினோத் வேலாயுதம், மா.பா. அன்புதுரை, க. சிட்டிபாபு ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற் பில், கழக இளைஞர் அணிச் செயலாளர் - சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த் துகிறார்.

இதில் முன்னாள் அமைச்சர் கள் மா. சுப்பிர மணியன், தா. மோ.அன்பரசன், அன்பில் மகேஷ்பொய்யாமொழி, கோவி. செழியன், கழக அமைப்புச் செய லாளர் ஆர்.எஸ்.பாரதி, மயிலை த. வேலு, எம்.கே. மோகன், பா. தாயகம் கவி, பூச்சி எஸ். முரு கன், துறைமுகம்காஜா, இனிகோ எஸ். இருதயராஜ், கலை கதிர வன், ந. இராமலிங்கம், ச. பரம சிவம், எஸ். மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம். காமராஜ், து. விக் டர், ஆர்.என்.துரை, வி.எஸ். கலை, ஏ. சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின் பாபு, நுங்கை வி. எஸ்.ராஜ், எம்.டி.ஆர். நாதன், வழக்கறிஞர் டி. ஜோஸ் டேனி யல், ஜெ. நற்குணநாதன், பா. ராபர்ட், எம்.வெற்றிச்செல்வி, துபாய் வி.ஆர். விஜய், ச. அசோக்குமார், மு. சீனிவாசன், ஜி.வி. சரவணன், லதா பிளா ரன்ஸ், வே.தேவேந்திரன் உள் ளிட்ட கழகத்தினர் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

எஸ். பாஷா குமார் நன்றி கூறுகிறார்.